**What is the Gospel? Tamil edition. Duncan Heaster, dh@heaster.org**
**Carelinks, PO Box 152 Menai NSW 2234 AUSTRALIA**

# சுவிசேஷம் என்றால் என்ன?

## சுவிசேஷம் என்றால் என்ன?

வேதாகமத்தின் செய்தியை கருத்தில் கொள்வதற்காக நீங்கள் நேரம் செலுத்துவதைப் பார்ப்பது இனிமையாயிருக்கிறது. ஒரு வேளை நீங்கள் மதத்தை குறித்து எச்சரிக்கையாய் இருக்கிறீர்களோ. ஆலயத்திற்குச் செல்வதும், சடங்குகளைச் செய்வதும் பரம்பரியத்தை தொடர்வதுமே அது. அதனை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் இருதயங்களில் அவர் வாழ்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது. நான் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு நடத்தைகளை வேதாகமம் தெளிவாக விளக்குகிறது. கூடவே வேதாகமத்தில் இவை சிறிதே உள்ளது. ஒவ்வொரு வாரமும் இயேசுவின் நினைவாக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதும் அப்பத்தை உடைப்பதும் இரண்டு முக்கியமானவைகளாக இருக்கின்றன.

உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் வேண்டுமென்ற ஒரு சாதாரண நபராக மட்டுமாகவே நீங்கள் இருக்கலாம். ஆனால் இதில் ஆழமாக போக வேண்டும் என்று நினைப்பதில்லை மத கை பிரதியை வாசிக்கக்கூடிய, வேதாகமத்தைப் பற்றி விளக்கம் கொடுக்க வரும் அல்லது அதைப்பற்றி விவாதிக்க வரும் நம்முள் பலருள் இது இப்போது உண்மையாகத் தான் இருக்கிறது. ஆண்டவர் கண்டிப்பாக இருக்கிறார் என்று நாம் நம்புவது அற்புதமாக இருக்கிறது. ஆனால் கண்டுபிடிப்பதற்காக அதிக அளவில் காத்திருக்கிறது, அவருடைய வார்த்தையை படிப்பதன் மூலம், வேதத்தை படிப்பதன் மூலம், நாம் அவரைப் பற்றி தெரிந்துக் கொள்ள முடியும் கூடவே அவருடைய அழிவில்லாத திட்டத்தில் நாம் பங்கும் கொள்ளலாம், அந்தப் புத்தகமானது அதை எழுதிய மக்களுக்கு சக்தி அளிக்கப்பட்ட ஆவியால் எழுதப்பட்டது, மற்ற புத்தகத்தைப் போல இது மனிதனுடைய வார்த்தைகள் மட்டும் கிடையாது இதனால் தான் இதைப் படிப்பது இவ்வளவு மதிப்புள்ளதாய் இருக்கிறது.

ஆனால் இவை எல்லாம் உங்களுக்கு தெரியும் என்று நீங்கள் நினைக்கலாம். வேதாகமத்தைப் பார்த்திருப்பீர்கள். அதைக் கண்டிருப்பீர்கள். ஆனால் நீங்கள் மிக மிக நேர்மையானவராக இருந்தால் ஏதோ ஒன்று காணாமல் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வீர்கள். இன்னமும் அந்த வெறுமையான எண்ணம் இருக்கிறது. வருங்காலத்தின் பயம், நாம் கடைசியாக சேரும் இடத்தைக் குறித்த

நம்பிக்கையில்லாமை .... இது கருப்பு நாய் பல ஆண்களையும், பெண்களையும் அவர்களின் கல்லறை வரை தொடர்வதைப் போல சந்தேகப் படுவதாகும். கூடவே உங்களுக்காக நாங்கள் சொல்கிறோம்: மீண்டும் ஒரு முறை முயற்சி செய்யுங்கள். வேதாகமத்தைப் பற்றிய உங்களுடைய கருத்துக்களுடன் மனித கருத்துக்கள் கலந்து இருக்கக் கூடும். வேதாகம பாடத்திற்கே மீண்டும் செல்லுங்கள்.

அல்லது நீங்கள் கிறிஸ்தவத்தை 'மற்றுமொறு அறிவுள்ள சாகசமாகவும்' சில நேரம் விளையாடக் கூடிய பொழுதுபோக்காகவும், மற்றுமொரு கவர்ச்சியாகவும், கல்லறைக்கு அழைத்துச் செல்லும் சாலையிலுள்ள நகரமாகவும் பார்க்கலாம். இந்த வகையான நல்லதில் நம்பிக்கையற்ற மனநிலையுடன் இருப்பதற்கு வாழ்க்கை மிகவும் குறைவாக உள்ளது. ஒரு நாள் நீங்கள் உங்கள் கல்லறையில் புதைக்கப்படுவீர்கள், ஒரு நாள் மரணத்தின் கொடூரமான முடிவானது உங்களுக்கு அருகில் வரும். வேதாகமத்தின் பாடத்தைக் கேட்பதற்கு இப்போது ஒப்புக்கொடுங்கள். தயவு செய்து, முழுமையாக உங்களுடைய நலனிற்காக, வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை கருத்தில் கொள்வதற்காவது சில நிமிடங்களை ஒதுக்குங்கள்.

***சுவிசேஷம் என்றால் என்ன*** என்ற கேள்விக்கு நான் பதிலளிக்கட்டுமா? தயவு செய்து புதிய ஏற்பாடு புத்தகத்தில் உள்ள மத்தேயு 1:1க்கு செல்லுங்கள். சுவிசேஷத்தைக் குறித்த மத்தேயுவின் விளக்கத்தின் தொடக்கம் இதுவே. நாம் இப்படியாக வாசிக்கிறோம்.

*ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு*

நாம் எதிர்பார்த்ததைப் போல இது இல்லை. இயேசு தாவீது மற்றும் ஆபிரகாமின் சந்ததி என்று அவன் சொல்கிறான். கூடவே இது மத்தேயுவுக்கு சுவிசேஷத்தின் தொடக்கமாயிருக்கிறது. பவுல், இதை இதே முறையில் பார்த்தான். கலாத்தியர் 3:8ஐ பாருங்கள்.

*மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.*

இதனால் ஆபிரகாமிற்கு வாக்கு கொடுக்கப்பட்டதே சுவிசேஷமாயிருக்கிறது. இதைத் தான் பவுல் சொல்கிறான். ஆபிரகாமிற்கு ஆண்டவர் கொடுத்த சத்தியம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இதனால் நாம் பழைய ஏற்பாட்டிற்கு திரும்பச் சென்று, ஆண்டவர் ஆபிரகாமிற்கு என்ன சொன்னார் என்பதைப் பார்ப்போம். நாம் வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகமத்திற்கு செல்வோம். ஆதியாகமம் 17:8

*நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.*

இந்த பூமியில் ஆபிரகாமும் அவனுடைய குழந்தைகளும் எப்பொழுதும் வாழ்வார்கள் என்று ஆபிரகாமிற்கு சொல்லப்பட்டது. இதனால், அழிவில்லாத வாழ்வு என்ற எண்ணம் பழைய ஏற்பாட்டில் வருகிறது. வேதாகமத்தின் முக்கியமான செய்தியானது முழுவதுமாய் ஒன்றாகவே இருப்பதைக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். இது எப்படி இருக்கக் கூடும்? ஆதியாகமம் 22:17-18க்கு செல்லுங்கள்.

*நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று* ***கர்த்தர்*** *சொல்லுகிறார் என்றார்.*

முழு உலகத்தின் ஆசீர்வாதத்திற்கு காரணமாய் இருக்க கூடிய ஒரு மகன் ஆபிரகாமிற்கு வேண்டியிருந்தது. வேதாகமம் அதை எப்படி எடுத்துக் கூறுகிறது என்பதையும் நமக்கு அது எப்படி கருத்துக்களை தருகிறது என்பதையும் பார்ப்பதே வேதாகமத்தை நாம் புரிந்து கொள்ளக் கூடிய இப்போதைய வழி. நாம் இப்போது வாசித்த இந்த வசனங்களெல்லாம் புதிய ஏற்பாட்டில் -அப்போஸ்தலர் 3:25-26 இல் எழுதப்பட்டுள்ளது. நாம் அங்கு சென்று விளக்கத்தைக் கண்டுபிடிப்போம்.

*நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்குப் புத்திரராயிருக்கிறீர்கள். அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்.*

இதனால், ஆபிரகாமின் விதை யார்? இவ்வுலகம் முழுவதுமுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் எந்த ஆசீர்வாதங்களை இயேசுவானவரால் கொடுக்க முடியும்? பாவங்களை மன்னிக்கும் தன்மையையும், இரட்சிப்பின் ஆசீர்வாதங்களையும் கொடுக்க முடியும். நாம் இன்னமும் அதிகமாக கலாத்தியர் 3:16க்கு செல்வோம்.

*ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.*

இதனால், ஆபிரகாமின் விதையாக இருந்தது தனி மனிதனாய் இருந்த இயேசு தான். வானத்தில் உள்ள அதிக நட்சத்திரங்களைப் போல எப்படி ஒரு மனிதன் பல மனிதனாக முடியும்? கலாத்தியர் 3:27-29ஐ வாசியுங்கள்.

*ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்.*

இதனால், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மட்டும் தான், இந்த பூமியில் உள்ள அழிவில்லாத வாழ்க்கையின் வாக்குத்தத்தங்களில் பங்கு உண்டு. இதனால் தான், நாம் மீட்கப்படவேண்டுமானால் நாம் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் "இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே" (அப்போஸ்தலர் 28:20) தான் தன்னுடைய விசுவாசம் என்று பவுல் சொன்னான். அவன் மரணத்தை சந்திக்கும் பொழுது இஸ்ரவேலின் விசுவாசத்தையே தன்னுடைய விசுவாசமாக கொண்டிருந்தான். ஞானஸ்நானம் என்றால் என்ன? அது தெளிப்பது கிடையாது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. மேலும் மொழி பெயர்க்கப்பட்ட ஞானஸ்நானம் என்று வார்த்தை உண்மையில் 'மூழ்கு' என்று பொருள் கொள்கிறது. ஒரு கப்பல் மூழ்குவது பற்றியும், மூழ்கி கிடப்பது பற்றியும், ஒரு துணியை ஒரு நிறத்தில் இருந்து மற்றொரு நிறத்திற்கு மாற்றிட சாயம் அடிப்பதற்காக முழுக்கப்படுவது பற்றியும் கூறும்போது இது உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மத்தேயு 3:13-16ஐப் பாருங்கள்.

*அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

இயேசு தண்ணீருக்குள் சென்று, அதிலிருந்து வெளியே வந்தார். குழந்தையாக, தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கப்படாமல் அவர் ஒரு பெரியவராக இருந்து மூழ்க வைத்து ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருந்தார். அதனால் தான் அது ஒரு ஆற்றில் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, அவர் ஞானஸ்நானம் எடுத்தது போலவே நாமும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இந்த மூழ்குதலும் எழுதலும் இயேசுவின் மரணத்தையும் உயிர்தெழுதலையும் குறிக்கின்றன. நாம் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நம்முடையதாக கருத முடிவெடுத்துள்ளோம் என்பதையும் இது குறிக்கிறது. இதனால் தான் இது மூழ்கப்படுதலின் மூலமாக இருக்க வேண்டுமே தவிர தெளிக்கப்படுதலின் மூலமாக இருக்கக் கூடாது. ரோமர் 6:3-5ஐப் பாருங்கள்.

*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.*

இதனால் தான், உங்களை ஞானஸ்நானம் எடுக்கும் படி முறையிடுகிறோம். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதை, வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது, நாம் அவருடைய பகுதியாகிறோம், இதனால் சத்தியங்கள் நமக்கும் பொருந்துகிறது. இதனால் அவர் திரும்ப வரும் பொழுது, நாம் உயிர்ப்பிக்கப்படுவோம். நியாயம் தீர்க்கப்பட்டு, பின்பு கர்த்தரின் வார்த்தைக்கு ஏற்ப நாம் உண்மையாக வாழ்ந்திருந்தால், அவருக்கு இப்போது இருக்கும் அழிவில்லாத வாழ்க்கை நமக்கும் கொடுக்கப்படும். பின்பு நாம் பூமியில் இருக்கும் கர்த்தரின் இராஜ்ஜியத்தில் எப்பொழுதும் வாழ்வோம். நீங்கள் இதை நம்பினால், வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தம் கிடைக்கும். எந்த வகை பிரச்சினைகள் நமக்கு இருந்தாலும், அவை எல்லாம் தற்காலிகமானது தான் என்பதை நாம் உணர்வோம். கிறிஸ்து திரும்பி வரும் பொழுது நமக்கு அவர் புதிய மற்றும் அழிவில்லாத வாழ்க்கையைக் கொடுப்பார். இதனால் தான் வேதாகமத்திலும் கிறிஸ்துவிலும் உண்மையான விசுவாசம் இருக்கிறது. நம்முடைய இன்றைய பிரச்சனைகள் பெரியதாய் தெரியாத அளவிற்கு அந்த விசுவாசம் பெரியதாய் இருக்கிறது. ஆனால் இந்த இயேசு என்ற மனிதரால் எப்படி இரட்சிக்க முடியும் என்று கூற முடியும்? அவர் நம்முடைய பிரதிநிதியாக இருந்தால், இதனால் தான் நாம் அவருடைய மரணத்திற்கும், உயிர்ப்பித்தலுக்கும் உள்ளாகும் படி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர் நம்மைப் போலவே இருந்தார். எபிரெயர் 2:14-18ஐப் பாருங்கள்.

*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.*

சாத்தான் ஒரு விலங்கோ அல்லது ஒரு டிராகனோ இல்லை என்பதைக் கவனியுங்கள். இது இங்கு பாவத்தின் உருவகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) ஆனால் மரணத்தின் சக்தி சாத்தானுக்கு உண்டு என்று நாம் இங்கு வாசிக்கிறோம். நம்முடைய சொந்த இயல்புகளுக்கு எதிராகவே நாம் போராட வேண்டியுள்ளதே தவிர நமக்கு வெளியே இருக்கும் எந்த கண்ணிற்கு தெரியாதவற்றிற்கும் எதிராக அல்ல. அவர், இதைப் போலவே, பங்கு எடுத்துக் கொண்டதை எல்லாம், அதே இயேசு என்று 14ஆம் வசனம் பலமுறை சொல்கிறது. ஆனாலும் அதிக கிறிஸ்தவ குழுக்கள் ஐக்கியத்தில் மூன்று கடவுள்கள் இருக்கிறார்கள் என்றுப் போதிக்கின்றன. கூடவே அதில் ஒருவர் தான் இயேசு என்று சொல்கிறார்கள். ஆனால் வேதாகமம் இதைச் சொல்வதில்லை. கூடவே எபிரெயரைப் பொருத்த வரையில் இயேசுவைக் குறித்த அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாய் உள்ளது. அவர் நம்மைப் போலவே சாயலுடையவராக இருந்தார். இதை எழுத்தாளர் நான்கு முறை அழுத்திச் சொல்லுகிறார். அவர் நம்மைப் போலவே தூண்டப்பட்டார். மேலும் நம்முடைய சொந்த இயல்பின் மூலம் நாம் எப்படி தூண்டப்படுகிறோம்? யாக்கோபு 1:13-15ஐப் பாருங்கள்.

*சோதிக்கப்டுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.*

இயேசு மனித இயல்பு உடையவராக இருந்தார் என்று இது கூறுகிறது. ஆண்டவரை தூண்டமுடியாது என்றும் ஆனால் இயேசு தூண்டப்பட்டார் என்றும் எபிரெயர் சொல்கிறது. இதனால் இயேசு ஆண்டவரில்லை என பொருள்படாது. அவர் மரியாளின் மூலமாக, ஒரு மனிதனாக, பிறவிலேயே கர்த்தருடைய குமாரராகவும், தாவீது மற்றும் ஆபிரகாமின் சந்ததியாகவும் இருந்தார். மேலும் ஆண்டவர் இறக்க முடியாது. ஆனால் இயேசு இறந்தார். நம்மால் ஆண்டவரைப் பார்க்க முடியாது. ஆனால் இயேசுவை மனிதர்கள் பார்த்து அவரின் கையைப் பிடித்தார்கள். இயேசு அவருடைய பிறப்புக்கு முன்னால் எவ்வகையிலும் இருக்க வில்லை. அவர் மரியாளின் மூலமாக பிறந்த தேவகுமாரர். லூக்கா 1:31-35ஐப் பாருங்கள்.

*இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு* ***இயேசு*** *என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

எல்லா சொற்களும் எதிர்காலத்தில் கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்! ஆதியிலிருந்து இயேசுவைக் குறித்த எண்ணம், இயேசுவின் வரைபடம் ஆகியவை கர்த்தரிடம் எப்பொழுதுமே இருந்தபோதிலும் அவர் தேவக்குமாரனாக இருப்பார், என்பதும் மரியாள் அவரை தன் கருப்பையில் கருத்தாரிப்பாள் என்பதும் தான் இயேசுவின் தொடக்கமாயிருந்தது. மரியாள் ஒரு சாதரண பெண் என்பதைக் கவனியுங்கள். இயேசு ஆபிரகாம் மற்றும் தாவீதின் சந்ததி என்பது அவருடைய தாயார் அவர்களின் சந்ததியாக இருந்ததன் காரணத்தால் தான். ஒரு வேளை இயேசு ஆண்டவராக இருந்தால், மரியாள் ஆண்டவருடைய தாயாராக இருப்பார் மேலும் அவர் சாதாரண பெண்ணாக இருக்க முடியாது. வேதாகமம் போதிப்பது போல இயேசு தேவ குமாரனாக இருந்து கூடவே மனிதனின் மகனாக இருந்து மரியாளின் மூலமாக, ஆபிரகாம் மற்றும் தாவீதின் சந்ததியாக இருந்ததால் மரியாள் சாதாரண பெண் என்பது சாத்தியமாகிறது. இதனால் உண்மையான விசுவாசத்தின் ஒரு அமைப்பு அல்லது தவறான விசுவாசத்தின் ஒரு அமைப்பு என்பதில் ஒன்றுமேயில்லை. உண்மையான விஷயத்தை விசுவாசிப்பது முக்கியமானதாய் இருக்கிறது. ஏனென்றால் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை வேதவசனங்கள் பாதிக்கின்றன. எபிரேயர் 4:15,16ஐப் பாருங்கள்.

*நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.*

இயேசு நம்முடைய இயல்புடன் இருந்த காரணத்தால் நாம் விசுவாசத்துடன் அவர் மூலமாக கர்த்தரிடம் ஜெபம் பண்ணலாம். நமக்கு ஒரு மனித போதகரோ, ஆலய கட்டிடங்களோ அல்லது நம்முடைய ஜெபங்களை ஏற்றுக்கொள்ளவைக்கும் போதகர்களோ தேவையில்லை.

எனவே நாம் பேசியவற்றைப் பற்றி நான் சுருக்கமாக கூறுகிறேன்:

1. மூன்று கடவுள்கள் அல்ல ஒரே தேவன் தான் இருக்கிறார்
2. இயேசு ஆண்டவராக இல்லாமல், தேவ குமாரனாக இருக்கிறார். பிறப்பதற்கு முன்னர் அவர் இருந்ததில்லை. அவருக்கு நம்முடைய எல்லா தூண்டுதல்களும், மனித அனுபவங்களும் இருந்தது, ஆனால் அவர் எப்பொழுதுமே பாவம் செய்யவில்லை. ஒரு வலிமிகுந்த மரணத்தின் மூலம் அவருடைய வாழ்க்கையை நமக்காக கொடுத்தார், இதற்கு பிறகு, அவர் எப்பொழுதுமே பாவம் செய்யாத காரணத்தால் கர்த்தர் அவரை மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தார்.
3. தண்ணீருக்குள் மூழ்கி நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுப்பதின் மூலம் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பகிர்ந்து கொள்கிறோம்.
4. இதனால், இயேசு கிறிஸ்து திரும்பி வரும் பொழுது நாம் உயிர்ப்பிக்கப்பட்டு, நியாயம் தீர்க்கப்பட்டு, இந்த பூமியில் இருக்க போகும் அவருடைய இராஜ்ஜியத்தில் வாழ்வு பெறுவோம் - தேவன் மனிதனை உருவாக்கியபோதிருந்த ஏதேன்

தோட்டத்தை விட, இன்னமும் சிறப்பாக இந்த இராஜ்ஜியம் இருக்கும். போர், பஞ்சம், துயரம், மரணம் போன்ற பூமியில் இப்போது உள்ள எல்லா பிரச்சனைகளும் நிரந்தரமாக முடிந்து விடும்.

5. மரணத்திற்கு பிறகு நாம் சுய நினைவில்லாமல் இருப்போம் - 'நரகம்' என்றால் 'கல்லறை' என்று தான் பொருள்.

6. ஆத்துமா அழிவில்லாதது, நாம் குப்பையில் செய்யப்பட்டு, குப்பைக்கே திரும்புகிறோம். நாம் இறக்கும் பொழுது ஆண்டவர் திரும்ப எடுத்துக்கொள்ளும் ஆத்துமா தான் நமக்குள் இருக்கும் வாழ்கையின் சக்தி. மரணத்திற்கு பிறகு நாம் எந்த சுய நினைவுள்ள நிலையிலும் இருக்கப் போவதில்லை.

7. நமக்குள் இருக்கும் கெட்ட மனித ஆசைகளின் சின்னமாக இருப்பது தான் 'சாத்தான்,' இதை எதிர்த்துத்தான் நாம் போராட வேண்டும்; இது பறக்கும் நாகத்தின் பெயரோ அல்லது அரக்கனின் பெயரோ இல்லை. ஆண்டவர் 100% சக்தி உள்ளவர். அவர் தன்னுடைய சக்தியை சாத்தானுடன் பகிர்ந்துக் கொள்வதில்லை, நம்முடைய எல்லா பிரச்சினைகளும் கர்த்தரிடமிருந்து தான் வருகிறது. சாத்தானிடமிருந்து இல்லை, ஆகவே இதனால் அவற்றிற்கு ஒரு நன்மையான ஆவிக்குரிய நோக்கம் உள்ளது.

8. நமக்கு நாமே வேதாகமத்தை வாசிப்பதன் மூலம் கர்த்தரை அடைவதற்கான உண்மையான வழியை நம்மால் கண்டுக்கொள்ள முடியும்.

இந்த விஷயங்களைப் படிப்பதற்காகவும் மேலும் உண்மையான சுவிசேஷத்தை கண்டிப்பாக கண்டுக்கொள்ளும் வரையிலும் உங்களுக்கு நீங்களே எந்த ஓய்வும் தர வேண்டாம் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் இலவச வேதாகம படிப்பை படியுங்கள்; ஒரு நாள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வதை உங்களுக்குள்ளே ஒரு குறிக்கோளாக வைத்துக் கொள்ளுங்கள். இதன் பின்பு, நித்திய வாழ்வின் விசுவாசம் உங்களுக்குள் கண்டிப்பாக இருக்கும். சரி, நம்மால் நித்திய வாழ்வை கற்பனைப் பண்ணி பார்க்க முடியாது. ஒரு நீண்ட, நீண்ட கோடுடைய, முடிவில்லாத தூரமாக இழுத்துச் செல்லக்கூடிய வாழ்வை கற்பனை செய்து பார்க்கும் படி நான் உங்களுக்கு யோசனை மட்டுமே கூறமுடியும். மேலும் நாம் இந்த வாழ்க்கையை துவங்குவதற்கு ஒரு சில மில்லி மீட்டர்களே பின்தங்கியுள்ளோம், நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று, அவருக்குள் வாழ்வதே நம்முடைய மெய்யான விசுவாசமாய் இருக்கிறது. இதை ஒரு சாதாரண விஷயமாகவோ இதை ஒரு மதமாக மட்டுமே கருதாமல் இவை எல்லாவற்றையும் தீவிரமாக எடுத்துக்கொள்ளும்படி உங்களைக் கெஞ்சுகிறேன்.

*டன்கன் ஹீஸ்டர்*

## வேதாகமத்தை பயனளிக்கக்கூடிய முறையில் வாசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

## கட்டணம் இல்லாதது

ஒரே வேதாகமம் தான் இருக்கிறது ஆனால் பல ஆலயங்கள் இருக்கின்றன. வேதாகமத்தின் உண்மையான கருத்தை கண்டு கொள்வதற்காக உங்களுக்கு நீங்களே வேதாகமத்தை வாசிக்க வேண்டும் என்று நாங்கள் உங்களுக்கு ஆலோசனை

கூறுகிறோம். ஒரே ஒரு கர்த்தர் இருக்கிறார் என்பதையும், இயேசு தான் தேவகுமாரன் என்பதையும், அவர் நம்முடைய பாவத்தை சுமந்தார் என்பதையும், மேலும் அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் இருந்து நாம் பயன் பெற வேண்டுமானால் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டுமென்பதையும் நாம் விசுவாசிக்கிறோம். பூமியில் (பரலோகத்தில் அல்ல) கர்த்தருடைய இராஜ்ஜியத்தை ஏற்படுத்த, சீக்கிரமாய் அவர் திரும்புவார். வேதாகமத்தை நீங்கள் படிப்பதற்கு உங்களுக்கு உதவி செய்யக் கூடிய ஒர் இலவச புத்தகத்தை பெற்றுக்கொள்வதற்கு (கீழே) கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்தை தயவு செய்து பூர்த்தி செய்யுங்கள்.

---

பெயர்: ____________________________________________

முகவரி:___________________________________________

____________________________________________

____________________________________________

தொலைபேசி எண்:____________

மொழி:

அனுப்ப வேண்டிய முகவரி:
Bible Basics, 49 Woodfields, South Croydon, Surrey CR2 0HJ ENGLAND

www.carelinks.net    email: info@carelinks.net